நாயேனுக் கேது பயம்?......
கந்தன் என்றால் கருவாகும் - உமை
மைந்தன் என்றால் உருவாகும்
முருகன் என்றால் மூச்சாகும் - முத்துக்
குமரனென்றால் பாட்டாகும்..........

(ஸ்ரீ அமர்ந்த)

அரஹர சிவசிவ முருகா - உந்தன்
அருளன்றி கதியேது திருவே மால்மருகா........

அமுதூட்ட ஆற்றருகே வந்தாய் - ஆலம்
இலைமீது அமுதாகி அருள் எல்லாம் தந்தாய்
இருளான இதயத்தில் வந்தாய் - பூவரசாகி
புண்ணியனார் சமாதியிலே நின்றாய்.....

ஒளியாகி அறிவாகி நின்றாய் - பூவரசத்தின்
அருகினிலே ஆலயமும் கண்டாய்
பசிபோக்க மடங்களையும் கொண்டாய்- அடியர்
பிணிபோக்கி அன்னதானக் கந்தனாகி நின்றாய்.......

கல்லோடைக் கந்தனாகி வந்தாய் - பின்னர்
காத்து அருளவென்று காலடியும் தந்தாய்
அமுதாகி அடியர் பசி தீர்த்தாய் - பின்னர்
வேலாகி ஞானத்தையும் விரும்பியே தந்தாய்....

ஸ்ரீ செல்வச் சந்நிதிக்கு வந்தாய் - அங்கே
செல்லா நின்ற வினைகள் சொல்லாமலே ஓடும்
துதிப்போர்க்கு வல்வினைகள் போகும் - அங்கே
துதியாத மனமெல்லாம் தூள்தூளாய் ஆகும்.......

ஞானத்தை யான் அறியவென்றோ - இங்கு
ஞான ஒளிகாட்டி நாயேனைக் கவர்ந்தாய்
ஞானானந்தனும் இங்கு வந்தான் - அந்தப்
பேரானந்த நினைவைச் சிந்தையிலும் தந்தாய்

தருகின்ற தன்மையினால் இயக்கம் - நீ
மறந்தாலோ தமியேனுக் கோயாத உறக்கம்
எழுகின்ற நாதத்தால் மயக்கம் - அந்த இன்பநிலை
காட்டுதற்கு ஏன் இன்னும் தயக்கம்.....



சின்னஞ்சிறு வேலவனே - என்
சிந்தையிலே நின்றிடையா
ஸ்ரீ செல்வச் சந்நிதிக்கு
வந்திடுவேன் தந்திடையா!

அன்னை தந்தை உலகமென்று
அண்ணன் பழம் பெற்றானே
உன்னடியார்க் கோர் உலகம்
நீ அமைத்தாய் பழனியிலே

தென்னாடுடை சிவனும் உண்ணா முலையாளும்
தேடியே வந்தாலும் தென்பழனி அமர்ந்தாயே
பழம்நீ என்றாலும் பதிவிட்டு ஏகாமல்
எம்பசி தீர்த்திடவே இருந்தாயே எம்முடனே!

வீரவாகு தேவர் இங்கு தூதுசெல்லும் வழியிலே
சந்திகாலப் பூசை செய்தார் ஸ்ரீ செல்வச்சந்நிதியில்
அமரர் கூறைதீர அபயகரம் காட்டி
அன்றுமுதல் இன்றுவரை ஆதரவும் தருகின்றாய்!

பூவரச மரத்தடியில் புண்ணியனார் சமாதி கண்டார்
வேலாக அவரருகே வீற்றிருப்பேன் என்றாயே
வேண்டும் அடியவர்க்கு தாண்டும் வழிதரவே
கல்லோடைக் கரையினிலே காலடியும் தந்தாயே!

தொண்டை மானாற்றருகே வேண்டுகின்றார் தொண்டரெல்லாம்
வேலவா உனையன்றி வேறு கதியேது
அன்னையாய் தந்தையாய் அருட்குருவாய் தெய்வமாய்
ஆற்றருகே அமர்ந்தவனே ஆறாதோ எம்துயரம்!

கந்தன் என்றால் அர்த்தம் கருணையோ -உமை
மைந்தன் என்றால் அர்த்தம் மழையாகிப் பொழிவதாலோ
வேலன் என்றால் அர்த்தம் வேண்டுவது தந்தருளும்
பாலன் என்றால் அர்த்தம் பாபி எனைக் காப்பதாலோ (கந்தன்)

அன்னதானக் கந்தனாகி அடியரின் பசி போக்கி
ஆற்றங்கரை வேலனாகி ஆறாத துயரம் மாற்றி
சந்நிதிக் கந்தனாகி சங்கடங்கள் தனை நீக்கி
சரணாகதி என்றால் சரவணபவமாகும் (கந்தன்)

தொண்டைமான் ஆறாகி தொண்டர் குறை தீர்த்தருளும்
வேற்கரணித் தீர்த்தமாகி வேதனைகள் தனைப் போக்கும்
சரவணப் பொய்கையாகி சர்வமங்களம் ஈட்டி
பூவரச மரத்தடியில் பூவாக்கி பொன்னடி சேர்க்கும் (கந்தன்)

ஆறுமுகமாகி அனைத்தையும் அள்ளித் தந்து
ஏறுமுகமாகி சத்ரு சங்காரம் செய்து
ஆறுபடை வீட்டின் பின்னே ஆற்றங்கரை அமர்ந்தருளி
ஆறுதலை எனக்களித்த ஆறுமுகா சரணமய்யா (கந்தன்)

நோய்க்கெல்லாம் மருந்துண்டு முருகா -சந்நிதியில்
திருநீறும் திருஅமுதும் தீர்க்காத நோயுண்டோ (நோய்க்)

பன்னிரு விழிப்பார்வை என்றும் இருந்தும் -உந்தன்
பன்னிரண்டு அபயகரம் கண்டும்
பன்னிரண்டு ஆண்டுகள் தான் வந்தும் -பாலன்
நோயின்னும் முற்றாக மாறாத தேனையா (நோய்க்)

நான் செய்த தீவினையோ அறியேன்
யார் செய்த சூழ்வினையோ புரியேன்
எனை வந்து சூழ்ந்தாலும் பொறுப்பேன்
என்பாலனை இன்னும் தான் வாட்டுதல் முறையோ (நோய்க்)

காரணத்தால் காரியங்கள் நடப்பதென்று புரிந்தும்
கலங்குகின்ற மனத்தினுக்கு அமைதி தனைத் தாராய்
விலங்கு மனம் விமலா உனை வாழ்த்தும்
துலங்கவைத்து துயர் தீர்த்தாய் துதிபாடி வாழ்வேன் (நோய்க்)



நீ போடும் பிச்சைக்கு நான் பாடும் எச்சில்களை
மெருகூட்டி வாழவைக்குமென் தெய்வமவன் சந்நிதியான்
செல்வச் சந்நிதியான் ஆற்றங்கரையரசன்
கல்லோடைக் கரையமர்ந்த கலியுகத்தின் வரதனவன்
நான் வாழ வேண்டுமென்று நாட்டைவிட்டே அனுப்பிவிட்டு
வீட்டையுமே வீழ்த்திவிட்டு வினை அறுத்து நின்றாயோ
செல்வச் சந்நிதியான் ஆலம் இலை அழகன்
பூவரச மரத்தருகே வேலாகி நின்றவனாம்!
சூழ்ந்தவினை சூழாதிருக்க இருள் சூழ்ந்த கண்டத்தில்
இருத்தி நீ வைத்தாலும் வினை முற்றாய் மாறவில்லை
செல்வச்சந்நிதியான் அன்னமலை அரசனவன்
சொர்ணமலை தான் படைக்கும் சுப்ரமண்ய தெய்வமவன்
எங்குதான் வந்தாலும் எல்லா வினையும் தீர்வதில்லை
பாதிவழி சென்றால்தானே மீதிவழி தான் புரியும்
செல்வச் சந்நிதியான் சங்கடங்கள் தீர்ப்பவனே
சஞ்சலங்கள் தீர்க்கவல்ல சந்நிதியின் சரவணபவமே!

வேலனுக்கு தீர்த்தமிங்கே வேதனைகள் தீருதிங்கே
பாலனுக்கு அபிஷேகம் பார்த்தோர் வினை தீருதிங்கே (வேலனுக்கு)

கூறுமடியார்கள் வினைகள் தீர்ப்பதற்கோ தீர்த்தமிங்கே
தீர்ந்த கதை கூறுதற்கோ தீர்த்தக்கரை தேடி வந்தான் (வேலனுக்கு)

குளத்தருகே நின்று கொண்டு குற்றேவல் புரிபவர்கள்
விளக்கருகே நின்ற அந்த விட்டலுக்கு இணையாகும்
விளக்கருகே நின்ற விட்டல் வேறெங்கும் செல்வதில்லை
விடிந்தபின் விட்டலெங்கே விளக்கொளியில் சங்கமமே. (வேலனுக்கு)

இரும்பு மனம் கனிந்தபின்னே இளகியதோ கரும்பாகி
கரும்பாகிச் சாறாகிப்பின் இளநீராய் மாறியதோ
கனிந்தபின் நெஞ்சக்கனல் எரிந்திடவே நீறானார்
நீறான பின்னாலும் பன்னீரால் கழுவி நின்றார் (வேலனுக்கு)

எண்ணிஎண்ணித் தெளிவதற்கோ என்னை வைத்தாய் எண்ணை வைத்தார்
எண்ணமும் அழிவதற்கோ பழம்வைத்து அரப்பிட்டார்
பாலான மனங்கள் தான் பாரினிலே பல உண்டு
பாலாறு பாயுதிங்கே பாலனுக்கு அபிஷேகம் (வேலனக்கு)

